நமது தேசத்தில் நவீன நாகரீகத்தைப் பின்பற்றிச் சீமைசாராயங் குடிக்கக் கற்றுக்கொண்ட படித்த இந்தியரை ஒதுக்கிவிட்டால் எஞ்சி நிற்கும். கட்குடியர் தாழ்ந்த ஜாதியாரான ஏழை ஜனங்களேயாம். இந்த ஜனங்கள் பெரும்பாலும் கஷ்டப்பாடுபட்டுழைக்கிறவர்களாயிருப்பதால், கள்ளானது தங்களுக்குச் சிரமபரிகாரந் தருகிறதென்றெண்ணி வேலைமுடிவில் அதைக் குடித்து ஒருவிதமான மகிழ்ச்சியடைகிறார்கள். இவர்கள் கள்ளருந்துவதால் வருகிறதாகக் கருதுகிறதால் சிரமப் பரிகாரமும், மகிழ்ச்சியும் எத்தகையதாயிருப்பினும், அந்தக் குடிப்பழக்கத்துக்கு இவர்கள் முழுமையுமாயடிமைப்பட்டு நீங்காத இழிவையும் தரித்திரத்தையும் அடைந்திருக்கிறார்களென்பது மட்டுமுண்மை. தற்சமயம் நமது நாட்டில் அதிக தாழ்வான நிலைமையிலிருக்கிற பூர்வீக குடிகளும் ஏழைகளுமான ஜனங்கள் நிரந்தரமாய் நிர்ப்பந்த நிலைமையிலிருந்து ஏனைய ஜாதியாரால் தாழ்வாய் மதிக்கப்படுவதற்கு அவர்களிடங் குடிகொண்டிருக்கிற குடியும் சில முக்கிய காரணங்களுள் ஒன்றென்று சொல்லத்தகும். இந்நாட்டு ஏழை ஜனங்கள் கட்குடியைமாத்திரம் ஒழித்துவிடுவாராயின், அவர்களுக்கு மேன்மையும் சுயமதிப்பும் தானாய் வருமென்பதை நாமெடுத்துக்கூறவேண்டிய அவசியமில்லை. குடியை விட்டால் அவர்குடி செழிக்கும் செல்வங் கொழிக்கும்; தரித்திரமெல்லாம் அதமாகும்; இப்போது அவர்களை இழிவாய் நோக்குகிற கண் இழிவாய் நோக்காமல் கௌரவமாய் நோக்கும்; அவர்களும் மேற்குலத்தாரான இந்திய மக்களுள் ஒரு வகுப்பாராய்க் கண்ணியம் பெறுவார்களென்பதற்குத் தடையேயில்லை. இங்கேநாமெடுத்துக்கூறியவனைத்தும் உண்மையென்பதை அறிவாளிகளொப்புவார்கள். பிரத்தியக்ஷமாய்ப் பல இடங்களில் கட்குடியின் மோசத்தையும் நாசத்தையும் இழிவையும் அழிவையும் உணர்ந்தறிந்து அதைத் தங்களை விட்டு நீக்கிவிட்ட தாழ்ந்த ஜாதிஜனங்கள் அநேகர் இப்போது சீருஞ்சிறப்பும் கௌரவமும் அந்தஸ்தும் அடைந்திருக்கிறார்கள். இதற்கு ஒரேஒரு திருஷ்டாந்தத்தை இங்கே எடுத்துக்கூறுகிறோம்.

வங்காள மாகாண மாகாணத்தில் புல்பானி என்றொரு ஜில்லாவிருக்கிறது. அந்த ஜில்லாவில் காந்தர் என்றழைக்கப்படுகிற இந்நாட்டுப் பூர்வீக குடிகளான மலைஜாதியாரிருக்கிறார்கள். அவர்களுடைய ஜனத்தொகை 50000 என்னப்படுகிறது. அவர்கள் பூர்வீகமாய் அநாகரீக வழக்கப் பழக்கமும், நரபலிமுதலிய குரூர செயல்களுமுடையவர்கள். சிலகாலமாய்க் கிறிஸ்தவ மிஷனெரிகள் அவர்கள் மத்தியிற்போய் உழைத்து வருகிறார்கள். இவர்கள் உழைத்து வருவதின்பலனாக தற்காலம் அவர்களுக்குள் பல மாறுதல்களுண்டாயிருப்பதாகக்கூறப்படுகிறது. கல்வியிலும் நாகரீகத்திலும் துரிதமாய் முன்னேறி வருகிறார்க

ளென்றறிய வருகிறோம். எல்லா மாறுதலையும்விட குடியை அடியோடே தலைத்துவிட்ட பெரிய மாறுதல் அந்த ஜனங்களுக்குளுண்டாயிருக்கிற தென்பதைச் சொல்ல சந்தோஷிக்கிறோம். அவர்கள் பொதுவாய்க் கட்குடிக்குப் பேர்போனவர்கள். ஆணும் பெண்ணும் பிள்ளைகளும் கள்ளைக்குடித்து வெறித்திருப்பார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் ஒரு வருஷகாலத்துக்குமுன்னர் கள்ளுஞ்சாராயமும் குடிப்பதிலிருக்கிற இழிவையும் தரித்திரத்தையும் நன்குணர்ந்து அதை முற்றுமே ஒழித்துவிடுவதற்கு முயற்சிசெய்தார்கள். அவர்கள் ஒரு பெரிய சங்கங்கூடிப் பேசின பொழுது, கீழ்க்கண்ட மூன்று கேடுகள் கட்குடியால் வந்திருக்கிறதென்று தீர்மானம் பண்ணினார்கள்: (1) தங்களுடைய நிலங்கள் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சாராயக் கடைக்காரர் கையிலும், அந்நியர் கையிலும், நாட்டுஜனங்கள் கையிலும் போய் விடுகின்றன. (2) தரித்திரமும் அதைச்சேர்ந்த பயங்கரதீமைகளும் தங்களுக்கு நேரிட்டிருக்கிறது. (3) தங்களுக்குள் பிரபல்யமாயிருக்கிற எல்லாக்குற்றங்களுக்கும் குடியே முக்கிய காரணம். இந்த மூன்று கேடுகளையும்பற்றி அவர்கள் தீர்க்கமாய் ஆலோசித்து பஞ்சமாபாதகத்தி லொன்றான இந்தக்குடியை இனி கனவிலும் நினைப்பதில்லையென்று தீர்மானம்பண்ணிப்பகிரங்கமாய்ப் பிரதிக்கினையுஞ் செய்தார்கள். பிரதிக்கினை செய்த விதமிது: அவர்களுக்குத் தலைவன் ஒருபெரிய பானை நிறைய கள்ளைக்கொண்டு வரச்சொன்னான். அதுவந்தபோது அந்தக் கள்ளைப் பூமாதேவிக்கு அற்பணம் செய்யச் சொல்ல, அந்தப்படியே அதை எல்லாருங் காணத்தரையிலே ஊற்றினார்கள். பிறகு தலைவன் எழுந்து நின்று பானையையெடுத்துத் தரையிலே மோதியடித்து உடைத்துப்போட்டு, இதுமுதல் கள்ளைக் குடிக்கமாட்டோம் என்று எல்லாரும் பிரதிக்கினை செய்யுங்களென்றாக்யாபிக்க, அப்படியே யாவரும் பிரமாணிக்கம் செய்தார்கள். அப்போது தலைவன் இந்தப்பிரமாணிக்கத்தை எவனாவது மீறி நடப்பானாயின், அவனுடைய குடித்தனம் இந்தப்பானையோடு நொறுங்கினதுபோல பல நூறுதுண்டாய் நொறுங்கிப்போவதாக என்று ஆணை வைத்தான். இந்தவிதமாய் அவர்கள்செய்த பிரமாணிக்கத்தின்படி மிகவும் நெறியாய் நாளது காறும் நடந்து வருகிறார்களென்று கேட்டுச் சந்தோஷிக்கிறோம் அவர்கள் குடியைவிட்ட ஒருவருஷகாலத்துள் ஆச்சரியமான நன்மைகள் விளைந்திருக்கின்றன. அவர்கள் ஊரிலிருந்த 27 மதுபானக்கடைகளில் 3 கடைகள் தவிர மற்றதெல்லாம் எடுபட்டுப் போயின. இதுகாறும் அவர்களுக்குள் நிகழ்ந்த அநேக தண்டனைக்குரிய குற்றங்கள் இப்போது மாயமாய்ப்போயின. மூன்றுமாதம் வரையில் சிறைச்சாலையில் ஒருவருமில்லாது வெறுமையா யிருந்தது. இப்போது ஜனங்கள் செலவுக்குத் தாராளமாய்ப் பணமிருக்கிறது. துணிமணி சாமான்கள் போதுமானமட்டும் வாங்கி மரியாதையாய் ஜீவிக்கிறார்கள். இதைவிட வியக்தமான திருஷ்டாந்தமென்னவிருக்கிறது? மற்ற ஜாதியாரும் இந்தமுறையை அநுசரித்தால் அவர்களுடைய தாழ்வும் தரித்திரமும் எங்கேயிருக்கும்? வங்காளத்துக்காந்தர் மத்தியிலுழைத்து அவர்கள் மத்தியில் இவ்வித மாறுதலைக்கொண்டுவந்த மிஷனெரிகள் எல்லாருடைய புகழ்ச்சிக்கு முரியவர்களாவர். அவர்களைப்போலவே ஏனைய பரோபகாரிகளும், மதுவிலக்குச் சீர்திருத்தக்காரரும் இவ்வித ஜனங்களை மேன்மைப்படுத்த முயல்வது மிகவும் அவசியமாகும். இப்போது அந்த ஜில்லாவில் சாராயக் கடைக்காரர் முறைப் பாட்டைக்கேட்டு எக்சைஸ் இலாகாதார் ஜனங்களுக்கு இடைஞ்சலைத்தேடிக் கடைகளை மறுபடியும் ஸ்தாபிப்பதாக அறிகிறோம். இதை வங்காள கவர்ன்மெண்டார் தடுப்பார்களென்று நம்புகிறோம்.

Anti-opium Campaign in China.

சீனாவில் அபினி நிவிர்த்தி.

சீனாவில் அபினி நிவிர்த்தி முயற்சி வெகு மும்முரமாய் நடந்து வருகிறது. பல மாகாணங்களில் அதன் விளைச்சல் அரசாங்கத்தாரால் தடுக்கப் பட்டிருக்கிறது. இப்போது அங்கே அபினி கிடைக்குமானாலும் முன்னைவிட அதிக விலை கொடுத்து வாங்கவேண்டும். சிலகாலத்துக்கு முன்னிருந்ததுபோல பகிரங்கமாய் அபினியருந்தும் வழக்கம் இப்போதில்லை. வீதிகளில் ஸ்தாபிக்கப் பட்டிருந்த அபினிக் கிடங்குகள் சாத்தப் பட்டு போயின. அபினியருந்துவதினால் தேசத்

துக்கிருக்கிற நாசம் இப்போது எல்லாராலும் உணரப்படுகிறது. உணவுத் தானியங்கள் விளையக் கூடிய நிலங்களில் அபினி விளைப்பதினாலே தேசத்துக்கே வறுமையும் சிறுமையும் வந்திருக்கிறதென்பதை ஜனங்கள் அறியத் தலைப்பட்டிருக்கிறார்கள். இதுகாறும் அபினிவிளைந்த நிலங்களிலே பருத்திமுதலிய செடிகளைப் பயிரிட்டுப் பரிசோதனை செய்ததில், விசேஷம் பருத்தி மிகவும் செழிப்பாய் வளருவதாகக் கண்டறியப்பட்டு, அபினி விளைந்த நிலங்களையெல்லாம் பருத்திமுதலிய பயன்தரும் பொருட்கள் விளையும் நிலங்களாக்கும் முயற்சி கையாடப்பட்டு வருகிறது. சீனாவில் சிலமுக்கிய மாகாணங்களில் மட்டுமன்று, தாழ்ந்த நிலைமையுடைய இன்னும் பல மாகாணங்களிலும் இவ்வித அபினி நிவிர்த்தி முயற்சி ஜரூராய் நடந்தேறி வருகிறது. சரியான சீனாவென்று சொல்லக் கூடியது 18 பெரும் மாகாணங்களுடையது. இதில் கன்சூ என்பது அதிகதூரமும் பலவகையில் அறிவு குறைந்ததுமான மாகாணம். இதில் கூட அபினி நிவிர்த்தி முயற்சி வெகு பலமாயிருக்கிறது. அந்த மாகாண அதிபதி சில தினங்களுக்கு முன்னர்தான் ஒரு இராஜவிளம்பரம் பிறப்பித்தார். அதில் மேற்படி மாகாணத்து ஜனங்கள் அபினி யுபயோகத்தை முழுவதுமாய் ஒழிக்க வேண்டுமென்று வெகுகண்டிப்பாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த இராஜ விளம்பரம் வருமாறு:—பலவருஷகாலமாய அபினி பெருத்த நாசத்தையுண்டுபண்ணி வருகிறது. அபினியைப்போல மனிதனைக் கெடுக்கிறது ஒன்றுமில்லை. அது வறுமையையும் பிணியையும், உற்பத்திசெய்து மனிதனை வேலைசெய்யத்திராணியற்றவனாக்கி அநேக குடும்பங்களை யழித்துவிடுகிறது. சீனசக்கிராதிபத்திய துரைத்தனத்தார் அடிக்கடி அதையொழிக்க வேண்டுமெனக் கட்டளைப் பிறப்பித்துவருகிறார்கள். அது இனி எக்காலுமில்லா தொழிய வேண்டும். இனிதேசத்தில் அபினியே பயிர் செய்யப்படக்கூடாது என்று சென்ற கோடைகாலத்தில் நாம் கட்டளையிட்டோம். 1910 ௵ பிப்ரவரி ௴ 9௳ க்குள் எல்லாமாகாணங்களிலும் அபினிபயிரிடல் அற்றுப்போக வேண்டுமென துரைத்தனத்தார் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். இந்தக்கட்டளை முழு இராச்சியத்திலும் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. கன்சூ மாகாணம் அபினி விளைச்சலாரம்பிக்குமுந்தி இப்போது இருக்குமாறு வறுமையடைந்திருந்ததா? ஏன் அபினி செழிப்புண்டாக்காது வறுமையுண்டு பண்ணிற்று! இதற்குப்பதிலாய் தானியம், பருத்தி, கிழங்குவகைகள் இவைகளை விளைவித்தால் பயனற்றுப் போகுமா? ஷெக்குவான் மாகாணத்தில் இனி அபினி விளைவிக்கக் கூடாதென்று அதன் இராஜப்பிரதிநிதி கட்டளைப்பிறப்பித்திருக்கிறார். மற்றெல்லா மாகாணங்களும் இதையனுசரிக்கப்போகிறது. கன்சூ அபினி ஏற்றுமதி செய்யாமற் போமானால் அதை விளைப்பதால் என்னலாபமுண்டாகப்போகிறது? அபினியை விலக்குமுந்தி கவர்ன்மெண்டுக்கு அதனால் 2 கோடி டேல்ஸ் வருஷவாரி வருமானம் வந்தது. அதுவும் அதற்குத் திருப்தியாயிருக்கவில்லை. ஆனால் இப்போது தேசத்தைவிட்டு இந்தப்பெரிய சாபம் ஒழிய வேண்டுமென்றும், தேசம் பலமடைய வேண்டுமென்றும் ஆசித்து இந்த வருமானம் முழுமையும் இழந்துவிட விரும்புகிறது. கன்சூமாகாண ஜனங்களே, சொற்ப ஆதாயத்தை விரும்பி பெரிய மோசத்தை மறந்து போகாதிருங்கள். பஞ்சம் வந்துவிடுமானால் அபினியை அருந்தியுங்கள் பசியை ஆற்றிக்கொள்ளக் கூடுமா? இப்போது நாட்டில் பஞ்சம்வரும் போலிருக்கிறதே. அரசாங்கத்தாருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியுங்கள்; அப்போது தேவ கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ளுவீர்கள். எச்சரிக்கை! அபினியை விடுங்கள்! இந்தப் பொல்லாப்பை வேரோடு களைந்துபோடுங்கள்! உள்நாட்டு அதிகாரிகள் சகல அபினி விளையும் நிலங்களையும் போய்ப் பார்வையிட உத்தரவு பெற்றிருக்கிறார்கள். அபினி விளைவைத் தடுக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். நீங்கள்மீளவும் அபினி பயிரிடக்கூடாது. அப்படி மீறி எவனாவது செய்வானாயின் அவன் இரக்கமின்றி தண்டிக்கப்படுவதுடன் அவனுடைய பயிர்களெல்லாம் வேரோடு பிடுங்கியெறிந்துவிடப்படும். சர்வ மாகாணங்களுக்கும் இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நடுங்கி யொடுங்கிக் கீழ்ப்படியுங்கள்’’

இந்த விளம்பரம் தன் கிரியைச் செய்யாமற்போகாது. அபினிவிளைவு கூடிய சீக்கிரம் முழுமையும் விலக்கப்பட்டுப் போகாவிடினும் அதிகமாய்க் குறைந்து போகும். விளைவு குறைந்தால் விலையேறிவிடும். விலை,

யேறினால் வீணர் வெற்றரெல்லாரும் வாங்கச்சக்தியின்றி திண்டாடுவார்கள். அப்போது அதன்மேலுள்ள விருப்பமேயொழிந்து வெறுப்புத்தோன்றி விடுமென்பதற்குச்சந்தேகமில்லை. இப்போதே அநேகருக்கு அதன்மேல் வெறுப்புத்தோன்றியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. சில இடங்களில் சென்ற மூன்று வருஷமாய் தானியங்கள் செம்மையாய் விளையாமல் பஞ்சம் தோன்றியிருக்கிறது. இந்தப்பஞ்சம் அபினி விளைவின் பெருக்கத்தினாலேயேயென்று ஜனங்கள் கண்டு அதன்மேல் வெறுப்புற்றிருக்கிறார்கள். கன்சூவில் சென்ற வருஷத்தில் மழை மோசஞ்செய்துவிட்டபடியால்கருப்புதோன்றியிருக்கிறது. தற்சமயம் 8000 பேர் வரையில் தருமசத்திரத்தில் போஷிக்கப்படுகிறார்கள். மிஷனெரிகள் தங்கள் வழக்கம்போல் பணச்சேகரஞ்செய்து ஜனங்களைக் காப்பாற்றிவருகிறார்கள். இந்தப்பஞ்சம் தேவகோபத்தாலுண்டானதென்று ஜனங்களெண்ணுகிறார்கள். இந்த எண்ணம் அபினியருந்துவதில் அதிக வெறுப்பையுண்டாக்குமென்பதில் தடையில்லை. தவிர, யூனன், சான்ஷி என்கிற ஜில்லாக்களில் அபினி விளைச்சல் தடுக்கப்பட்டபிறகு, தானியம் நல்லமாசூல் கொடுத்தது. இதனாலும் ஜனங்கள் அபினியைத் தொலைப்பதில் தைரியமடைந்திருக்கிறார்கள். மொத்தத்தில் சீனா, இந்த மகாபெரிய சத்துருவின் கரத்திலிருந்து விடுபட்டுவிட்டதென்றே சொல்லவேண்டும். இந்த விஷயத்தில் சீனகவர்ன்மெண்டு எடுத்த பிரயாசமும், காண்பித்த தைரியமும், சுய வெறுப்பும் அநேக நாகரீக துரைத்தனங்களுக்கும் நல்ல பாடமென்பதற்குச் சந்தேகமில்லை. மதுவிலக்கு விஷயத்தில் இப்படிப்பட்ட தைரியம் நமது கவர்ன்மெண்டுக்கு எப்போது வரும்.

Temperance Notes.

மதுவிலக்கு குறிப்புகள்.

The Bombay Moharrum :— பம்பாயில் மொஹரம் நாட்களில் வழக்கமாய் இரண்டு நாட்கள் சாராயக் கடைகளையெல்லாம் சாத்தி விடும்படி போலீஸ் கமிஷனர் கட்டளை பிறப்பிப்பதுண்டு. ஆனால் இந்த வருஷம் செவ்வாய் முதல் சனிவரையில் 5 நாட்கள் கடைகளைச் சாத்தி விடும்படி கட்டளையிட்டார். இதன்மேல் பலர் கூடி முறையிட்டுக் கமிஷனரைப் போய்க் கண்டு பேசியும் அவர் தமது கட்டளையை மாற்றவில்லை.

Temperance in Limdi :— கத்தியவாரிலுள்ள லிம்டி தாக்கூர் சாஹிபை மதுவிலக்குச் சீர் திருத்தக் காரர்கள் வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அவர் தமது சமஸ்தானத்தில் மிகவும் புகழ்ச்சிக் குரிய ஏற்பாடொன்றுசெய்திருக்கிறார். அதாவது 18 வயதுக் குட்பட்ட பாலியர் சாராயம் அருந்தக் கூடாதென்றும், சாராயம் விற்க லைசென்ஸ் பெற்றிருக்கிற யாதொரு கடைக் காரரும் அவர்களுக்கு விற்பனை செய்யக் கூடாதென்றும், இச்சட்டத்தை மீறுவோர் தண்டனைக் குள்ளாவார்களென்றும் ஆக்யாபனை செய்திருக்கிறார்.

Lessons in Temperance :—இங்கிலாந்து கல்வியிலாகா அதிகாரிகள் பிறப்பித்த மதுவிலக்குப் பாடத் தயாரிப்பு தர்ஜிமால் செய்யப்பட்டு பர்மா பாடசாலைகளில் பாடமாக வைக்கப் பட்டதுண்டா என்றும், இந்தியா துரைத் தனத்தாரால் அவ்வித ஏற்பாடுகள் யாதாயினும் செய்யப்பட உத்தேச முண்டா என்றும் சென்ற மார்ச்சு மாதத்தில் பார்லிமெண்டில் சர் ஹெர்பட் ராபர்ட்ஸ் ஒரு கேள்விகேட்டார். பர்மாவில் அவ்வித ஏற்பாடொன்றும் நடந்ததாகத் தெரியவில்லையென்றும், இந்தியாவில் ஏற்கனவே மூன்று மாகாணங்களில் மதுவிலக்குப் பாடங்கள் பாடசாலைகளில் சொல்லி வைக்கப்பட்டு வருகின்றனவென்றும், இன்னும் இரண்டு மாகாணங்களில் அந்த முறையைக் கையாடயத்தனங்கள் நடந்தேறி வருகின்றனவென்றும், உதவி யிந்தியா மந்திரி மிஸ்டர் மாண்டேகு அதற்கு விடை பகர்ந்தார்.

Opium Revenew in India :—சென்ற சர்க்கார் வருஷத்தில் அபினி வருமான வகையில் 1,056,300 பவுண் அதிகவருமானமிருந்ததாகக் கண்டிருக்கிறதே, இது அபினி அதிகமாய் செலவாவதினாலே வந்ததா, வேறு வகையாய் வந்ததா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அபினி அதிகமாய்ச் செலவாவதினாலே வந்ததல்லவென்றும், பெங்கால் அபினி அதிக விலைக்கு விற்பதினாலே வந்ததென்றும், முந்தின வருஷங்களை விட அபினி செலவு குறைந்தே வரு

கிற தென்றும் உதவி இந்தியா மந்திரி பார்லிமெண்டில் சொன்னார்.

Childrens, Act:—1909ஆ கிரேட் பிரிட்டனில் புதிதாக யாதொருமதுவிலக்குச் சட்டஞ் செய்யப் படவில்லையானாலும் 1908-ல் பரலாக்கின பிள்ளைகளின் சட்டம் 1909ஆ எப்பிரல் மாதத்தில்தான் ஊர்ச்சிதத்துக்குவந்தது. இந்தச் சட்டத்தின்பல செக்ஷன்கள் போதை யுண்டாக்கும் மதுவைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கக் கூடாதென்று தடுக்கிறது. முதலாவதுசெக்ஷன் "யாதொரு பிள்ளைகுடித்து வெறித்திருக்கிற பெற்றோர்பக்கத்தில் இராத்திரிகாலத்தில் படுத்திருக்கக் கூடாது" என்கிறது இரண்டாவதுசெக்ஷன் இது விஷயத்தில் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குவிசேஷஅதிகாரம் கொடுக்கிறது. மூன்றாவது செக்ஷன் 5 வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்குச் சாரயங் கொடுப்போரைத் தண்டனைக்குள்ளாக்குகிறது. நாலாவது செக்ஷன் 14 வயதுக் குட்பட்ட பிள்ளைகளுக்குத் தமது கடையில் மதுபானம் விற்கும் லைசென்ஸ் தாரரைத் தண்டனைக் குள்ளாக்குகிறது. இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தமுதல் குடிகாரரான ஸ்திரீ பிள்ளைகளைச் சாராயக் கடைகளில் அதிகமாய்க் காணோம் என்னப் படுகிறது.

Aliquor Seller Convicted:—மேல் வர்ஜீனியாவில் வழக்கக்குடியன் ஒருவனுக்குச் சாராயம் விற்றதற்காக ஒரு சாராயக் கடைக்காரன் 1771 டாலர்செலவோடு அபராதஞ் செலுத்த வேண்டியதாயிற்று. சில இடங்களில் குடியருடைய மனைவிகள் தங்கள் கணவன் மாருக்குச் சாராயம் விற்கக் கூடாதென்று கடைக்காரரே எச்சரிக்கவும் அதைமீறினல் ஷைகடைக்காரரை மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் கொண்டுவந்து தண்டனை வாங்கிக் கொடுக்கவும் சட்ட முண்டு.

Sir Thomas Lipton's Advice:— சமீப காலத்தில், பிரக்கியாதிப் பெற்ற தேயிலை வியாபாரியாகிய சர்தாமஸ் லிப்டன் ஒரு வாலிபர்கூட்டத்தில் பேசின பொழுது தமக்கு வாய்த்த மேன்மையும் ஜெயமும் தாம் மதுபானத்தைமுற்றுமாய் வெறுத்து விட்டதினால் தான் என்று சொல்லி 'பிற் கூறிய வார்த்தைகளையுரைத்தார் கார்க் சட்டைகள் ரக்ஷித்த ஜனங்களைப்பார்க்கிலும்அதிகமான ஜனங்களைக் கார்க்ஸ்க்ரூக்கள் ஆழ்த்தி விட்டன" என்றார். அதாவது சாராய புட்டிகளால் அழிந்தவர் பலர் என்பது பொருள்.

A Judge and a Drunkard's wife:— ஒரு நியாயஸ்தலத்தில் ஜட்ஜ் தமக்கு முன் குற்றவாளியாக நின்ற குடிகாரன் மனவியைப் பார்த்து "அம்மா மறுபடியும் உன் புருஷனைநான் அடைத்துவைக்க வேண்டியதாயிருக்கிறது, என்றார். அப்போது அந்த ஸ்திரீ" ஐயா, இதோடு மூன்று முறை என் கணவன் நியாயஸ்தலத்துக்கு வந்திருக்கிறார் தருமதுரை தயவுசெய்து அவரை வீட்டுக்கு அனுப்பி அங்கு பசியினால் வதையும் பிள்ளைகளுக்குச் சம்பாதித்துப் போடச் செய்து, அவரை நியாயஸ்தலத்துக்கு அனுப்புகிற சாராயக் கடையை அடைத்துப் போடுவீரானல் அது நலமாயிருக்கும்" என்று மறுமொழி பகர்ந்தாள்.

Excise in Mysore:—சென்ற வருஷத்து மைசூர் எக்சைஸ் இலாகாவின் ரிபோர்ட்டைக் கவனிக்கும்போது, முந்தின வருஷத்து வருமானத்தை விட சென்ற வருஷம் அதிக வருமானம் வந்திருக்கிறது. 1907-08ல் வருமானம் ரூபா 41,83,000. ஆனல் 1908-09-ல் 43,62,000 இந்த அதிகப் படி வருமானம் ஏலத்தில் போட்டி அதிகமாயிருந்தமையாலும், கள்ளிறக்கின மரங்களின் தொகை அதிகப் பட்டமையாலும் நேரிட்ட தென்னப் படுகிறது. 1908-09 மைசூரில் மாசூல் குறைந்து ஜனங்கள் கஷ்டமடைந்த வருஷமென்னப் படுகிறது. அப்படி யிருந்தும் சாராய வரி அதிகப் பட்டிருப்பதால் ஜனங்களுக்குள் குடி அதிகமாய்ப் பரவி வருகிற தென்றெண்ண வேண்டியதாகிறது. தவிர ஷை வருஷத்தில் கஞ்சா செலவும் அதிகப் பட்டிருப்பதாகக் காணப்படுகிறது.

The Late King-Emperor.

காலஞ் சென்ற நமது சக்கிரவர்த்தி.

மே மீ 20உ நமது இராஜ சக்கிரவர்த்தியின் தேகம் வின்சரில் நல்லடக்கம் செய்யப் பட்டது. பிரஜைகள் தங்கள் அன்புள்ள சக்கிரவர்த்திக்கும் செய்யவேண்டிய உத்தர கிரியையை மிகுந்த துக்கத்தோடும் சஞ்சலத்தோடும் செய்து முடித்தார்கள். லண்டன் பட்டணத்தில் ஜெர்மன் சக்கிரவர்த்தியுட்பட 40 க்கு அதிகமான அயல்நாட்டு முடிமன்னர்களும் லட்சக்கணக்கான உள்

நாட்டு வெளிநாட்டு ஜனங்களும் கூடிவந்து தங்களுடைய கடைசியான அன்பையும் துக்கத்தையும் அன்றுதினம் காண்பித்தது போல வேறெக்காலத்திலும் எந்த சக்கிரவர்த்திக்காகவும் காண்பிக்க வில்லையென்றே சொல்லவேண்டும். வெஸ்ட்மினிஸ்டர் ஆலிலிருந்து ஆடிங்டன்வரைக்கும் சென்ற பவனியில் கூடிவந்ததிரளான ஜனங்களை அமைதியாய் வைக்க போலீஸ் வீரரும் ராணுவவீரருமான 4000 பேரால் ஆகாமல் போய்விட்டது என்றும், 6000 பேர் மூர்ச்சித்து வீழ்ந்துவிட அவர்களில் அநேகர் வைதியசாலைக்கு கொண்டுபோகப்பட்டார்களென்றும், சொல்லப்படுவதால் பிரஜைகள் எட்வர்டு மகா இராஜாவின் பேரில் என்னவிதமான மதிப்பும் அன்பும் வைத்திருந்தார்களென்று நன்குவிளங்கும். லண்டன் நகரில் மாத்திரமல்ல உலகமுழுமையிலுமுள்ள அவருடைய பிரஜைகள் அவர் மேல் அதேவித அன்புவைத்திருந்தார்கள். சர்வதேசத்திலும் அன்றைய தினத்தில் என்றுமில்லாத துக்கநாளாகக்கொண்டாடினார்கள். இந்தியா முழுமையிலுமுள்ள பிரஜைகள் அன்றுதினம் தங்கள் எல்லாவேலைகளையும் நிறுத்தி ஆலயங்களிலும் கோவில்களிலும் ஆராதனை நடத்தி துக்கங்கொண்டாடினார்கள். இந்துஆலயங்களிலும் மகமதியர் மசூதிகளிலும் கிறிஸ்தவ கோவில்களிலும் விசேஷித்த ஆராதனைகளும் ஜெபங்களும் எடுக்கப்பட்டன. அருமைநாயகனை இழந்த அலெக்சேன்டரா சக்கிரவர்த்தினி தாயாருக்கும் மாக்ஷிமை நிறைந்த ஐந்தாம் ஜார்ஜ் சக்கிரவர்த்திக்கும் எண்ணிக்கை எற்ற அனுதாபசெய்தியும் அனுப்பிவைக்கப்பட்டன. எட்வர்டு இராஜசக்கிரவர்த்தி சத்துருக்களாலும் மித்துருக்களாலும் நேசிக்கப்பெற்ற அன்புநிறைந்த மேதாவியாயிருந்தார். தேசத்தில் எப்பொழுதும் சமாதானம் நிலைக்க வேண்டுமென்று பாடுபட்டு சமாதான கர்த்தாவினுடைய மெய்யான ஆவியைவகித்த அவருடைய பிள்ளையாய் எல்லாதேச மன்னர்களோடும் அன்புபூண்டு ஒப்புறவாயிருந்தார் ஆகவே சகல தேசத்தாரும் அவருடைய பிரஜைகளும் அவருக்காகத் துக்கப்படுவது ஆச்சரியமல்ல அவருடைய ஞாபகம் எக்காலத்திலும் அவரதுபிரஜைகளின் நெஞ்சைவிட்டு நீங்காமலிருக்கும் என்பதற்குசந்தேகமில்லை. இந்த பெரிய துக்கத்தில் தமது பிரஜைகளெல்லாரும் காண்பித்த அன்பையும் அனுதாபத்தையும் அலெக்சான்டராசக்கிரவர்த்தினியும் ஐந்தாம் ஜார்ஜ் சக்கிரவர்த்தியும் கண்டு எல்லாருக்கும் மிகுந்த நன்றி பாராட்டி இருக்கிறார்கள். எழாம் எட்வர்டு இராஜ சக்கிரவர்த்தி 1841 ஹு நவம்பர் மீ 9உ காலை 10-48 மணிக்கு பக்கிங்காம் அரண்மனையில் பிறந்தார் 1842 ஹு ஜெனவரி மீ 25உ வின்சரில், இப்போது இவருடைய சரீரம் அடக்கம் செய்யப்பட்ட சென்ட் ஜார்ஜ் ஆலயத்தில் இருவருக்கு ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டது.

தகப்பனுருடைய பேரால் ஆல்பர்ட் என்னும் கென்ட்பிரபுவாகிய பாட்டனுர் பேரால் எட்வாடு என்னும் பேரிடப்பட்டார். இவர் சிறு குழந்தையாயிருக்கையில் மிகுந்த தேவதாபக்தியும் சகல சற்குணங்களும் நிறைந்த இவருடைய அன்னையாகிய குயின்விக்டோரியா சக்கிரவர்த்தினியால் மிகுந்த ஜாக்கிரதையோடு பயபக்தியோடும் வளர்க்கப்பட்டார். ஆஸ்போரனில் இவரும் இவருடையசகோதாரும் தினந்தோறும் தோட்டவேலை செய்யவேண்டும் சகோதரிகள் சமையல்வேலை செய்து பழகவேண்டும் தகப்பனாகிய பிரின்ஸ் ஆல்பர்ட் வாஸ்தவமாய் அதற்கு என்னகூலி கொடுக்கவேண்டுமோ அதைமாலைதோறும் அவர்களுக்குக் கொடுப்பார் விளையாட்டு சாமான்கள் அவர்களுக்கு அதிகமாக கொடுக்கப்படமாட்டாது. சிலபோதுசர்க்கசுக்குப் போகமாத்திரம் இடம் தருவார்கள் 1859 ஹு நவம்பர் மீ 9உ இவர்தமது 18-ம் வயதை அடைந்தபடியால் சட்டபிரகாரம் சிம்மாசனத்துக்குரிய இளவரசனுனர் அப்பொழுது விக்டோரியா சக்கிரவர்த்தினி இவருக்கு ஒரு கடிதம் எழுதி இனி இவர் பெற்றோருடைய அதிகாரத்தினின்று நீங்கினவர் ஆவார் என்று தெரிவித்தார்கள். அந்தகடிதம் இதுவரையில் உலகத்தில் எழுதப்பட்ட சிரேஷ்டமான கடிதங்களில் ஒன்று என்று பதிக்கப்படுகிறது அதை வாசித்தபோது இளவரசரின் கண்களினின்று கண்ணீர் பெருகினதாகச்சொல்லப்படுகிறது. அதேவருஷம் பலதேசங்களைப் பார்க்க பிரயாணம்பட்டு ரோமாபுரிக்குப் போய் ஒன்பதாவது பயஸ்பாப்பானவரைக் கண்டார் 1860 ஹு அமெரிக்காவுக்குப் பிரயாணம் செய்துவந்த பிற்பாடு கேம்பிரட்ஜ் சர்வகலாசாலையில் சேர்ந்து உயர்தரக்கல்வி

ப்பெற்றுக்கொண்டார் 1861 ஹூ இவர் ஜெர்மெனிக்குபோயிருந்தபொழுது அங்கே டென்மார்க் தேசத்து இளவரசியான அலெக்சான்ருவைக் கண்டு பரிச்சியமாக 1862 ஹூ செப்டம்பர் மாதத்தில் இருவருக்கும் விவாகத்துக்கு நிச்சயம் செய்யப்பட்டது. 1863 ஹூ மார்ச்சி மீ 10உ செண்ட் ஜார்ஜ் ஆலயத்தில் இராஜவிவாகம் விமரிசையாய் நடந்தது. அந்த ஆலயத்தில் 1822 இல் முதலாம் என்றி அரசனுக்கு நடந்த கலியாணத்திற்கு பிந்தி நடந்த கலியாணம் இதுதான் இவர்களுக்கு கலியாணம் ஆனபிறகு இராஜியத்தின் வருமானத்திலிருந்து வருஷந்தோறும் இளவரசருக்கு 40,000 பவுனும் இளவரசிக்கு 10,000 பவுனும் கொடுக்கப்பட்டு வந்தது. இதற்குச் சற்று முந்தியே தகப்பனார் பிரின்ஸ் ஆல்பர்ட் காலஞ்சென்றுபோனார் இவர்களின் விவாகத்துக்குப்பிறகு மாரல்பாரோ மாளிகையிலும் பால்மாரிலும், சான்ரிங்காரிலும் வசித்துவந்தார்கள். முதல் குழந்தை பிரின்ஸ் ஆல்பர்ட் விக்டர் பிராக்மோரில் பிறந்தது மற்றபிள்ளைகள் மாரல்பாரோ மாளிகையில் பிறந்தது. 1865 இல் எட்வர்டு இளவரசர் அயர்லாண்டுக்குப் போனார்அதே வருஷம்பிரின்ஸ் ஜார்ஜ் ஜெனனமானார் தமது தகப்பனார் இறந்த பத்தாம்வருஷம் எட்வர்டு இளவரசருக்கு விஷஜுரம் கண்டு மரணத்துக்கு சமீபமாயிருந்தார். சகல பிரஜைகளும் அவரைக் காப்பாற்றினார் 1865 ஹூ பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என்கிற பட்டத்தோடு இந்தியாவுக்கு பிரயாணம் பண்ணிவந்து இவ்விடத்து பிரஜைகளாலும் மகாஇராஜாக்களாலும் விசேஷித்த சன்மானம் பெற்று சுயதேசம்போனார் அப்பொழுது இராஜாக்களால் இவருக்கு கிடைத்த வெகுமதியில் மதிப்பு 5-லட்சம் பவுண். 1900ஹூ எட்வர்டு இளவரசர் இளவரசியோடு டென்மார்க்குக்கு பிரயாணம் செய்கையில் பிரசில்ஸ் பட்டணத்தில் சிப்பிடோ என்கிற ஒருவாலிபன் துப்பாக்கிக் கொண்டு இவர்மீது இரண்டு வெடி சுட்டான். தெய்வச்செயலால் அந்த ஆபத்தினின்று தப்பிப்பிழைத்தார். 1901 ஹூ 22உ ஜனவரி மீ ஆஸ்போர்னில் விக்டோரியா சக்கிரவர்த்தினி மரித்துபோக ஏழாம் எட்வர்டு மகாராஜா என்கிற பட்டத்துடன் சிம்மாசனம் ஏறினார் அச்சமயத்தில் தமது நற்குணமுள்ள தாயார் வைத்துப்போன முன்மாதிரியின்படியே நடந்துகொள்வேன் என்று வாக்களித்தப் பிரகாரம் இந்த 9 வருஷகாலமும். சமாதானமான இராஜ்ஜியபாரம் செய்து காலஞ்சென்றுவிட்டார் இவருடைய இராஜ்ஜியபார காலத்தில் ஐரோப்பாகண்டம் முழுவதிலும் அடிக்கடி பிரயாணம் செய்து எல்லா தேசத்தையும் சமாதானப் படுத்திக்கொண்டது மிகவும் விசேஷமான காரியம்.

நமது புதிய சக்கிரவர்த்திக்கு இப்போது வயது 45 தமது தகப்பனார் சென்ற வழியிலேயே தாமும் சென்று அநேக வருஷ காலம் நல்ல அரசாட்சி செய்யும்படி கடவுள் அருள் புரிவாராக.

How Church Funds Collected:—அமெரிக்க "எண்ணெய் அரசன்" என்கிற மிஸ்டர் ராக்கபெல்லர் போய்த்தொழுதுகொள்ளுகிற ஐந்தாம் சாலை பாப்டிஸ்ட் ஆலயத்தில், போதகர் கோயிலைப் புதுப்பித்துக் கட்ட பணச்சகாயஞ்செய்யும்படி சபையாரைக்கேட்டார். "கொடுத்தலின் சுவிசேஷம்" என்கிற விஷயத்தின்மேல் அவர் பிரசங்கம் செய்துவிட்டு, காணிக்கைவாங்க ஏற்பாடு செய்தார். காணிக்கை வாங்கப் பட்டதின் பின்னர், எவ்வளவு தொகை மொத்தஞ் சேருகிறதோ அவ்வளவு தொகை மிஸ்டர் ராக்கபெல்லர் கொடுக்க போகிறாரென்று போதகருக்கு அறிவிக்கப் பட, அவர் அதைச் சபையாருக்கு அறிவித்து, அவர்கள் விருப்பம்போல் மறுப்படியும் காணிக்கைப்பையை ஜனங்களிடம் அனுப்பினார். சபையார் உற்சாகமடைந்து காணிக்கை கொடுத்தார்கள். அதைத் தொகையிட்டபோது 162000 டாலரிருந்தது. உடனேமிஸ்டர் ராக்கபெல்லர்அந்தத் தொகைக்கு ஒரு செக் கொடுத்துவிட்டார். இவ்விதமாய் 64,800 பவுண் ஒருநொடியில் சேர்ந்தது.

A Zealous Wife:— ஒரு பூடா பெஸ்த் ஸ்திரீ, தன்நாயகன் அவனுடைய முந்தின இரண்டு மனைவிகளின் உருவப்படங்களை வீட்டில் தூக்கிவைத் திருப்பதைச்சகியாமல், அவைகளை எடுத்துப்போடாவிட்டால் தான் தன் விவாகபந்தத்தை நிவர்த்தி செய்து கொள்ளுவதாய்ப் பயமுறுத்துகிருள் என்றுஒரு பத்திரிகை கூறுகிறது. "ஓவிய நீள்சுவரெழுது மோவியத்தைகண்ணுறுவான் தேவியை யாமழைத்திடவாண் சித்திரமே நான்பாரேன், பாவையர்த

முருவெனினீர் பார்க்கமனம் பொறே னென்ருள் காவி விழிமங்கையிவள் கற்பு வெற்பின் வற்புளதால்' என்னும் நீதி நூலார் வார்த்தையை இந்த ஸ்திரீ மெய்ப் பிக்கிருள்.

பொது வர்த்தமான குறிப்புகள்.

Earthquake in Costa Rica:—காஸ்டாரிக்காவில் கார்டேகோ என்னும் பட்டணம் மேமீ 4வ பூமி அதிர்ச்சியால் அரைவாசி அழிந்து விட்டது. 500 ஜனங்கள் மாண்டு போனதாகத் தெரிவிக்கப் படுகிறது. மிஸ்டர் கார்னீஜி என்கிற அமெரிக்க கோடீஸ் வரனின் சமாதான அரண்மனை நிர் மூலமாய் விட்டதென்று சொல்லப் படுகிறது.

Coal Mine Explosion :—மேமீ 11வ வொயிற்றேவன் என்னுமிடத்தில் ஒரு நிலக்கரி சுரங்கத்தில் வெடி விபத்துண்டாகி 136 பேர் பூமியில் புதைக்கப் பட்டுப் போனுர்கள். அவர்களை இரட்சிக்கும் படி போனவர்கள் 4 பேரை மாத்திரம் காப்பாற்றினுர்கள். மற்றெல்லாரும் மடிந்து போனதாக அஞ்சப் படுறகிது. நமது ஐந்தாவது ஜார்ஜ் சக்கிரவர்த்தி நாதனற்றுப் போன அவர்கள் குடும்பங்களுக்குப் பண உதவியும் அனுதாப செய்தியும் அனுப்பினுர்.

Nasik Conspiracy Case :—இந்தக் கேசின் கீழ் கோர்ட்டு நடவடிக்கைகள் யாவும் முடிந்து விட்டது. மொத்தம் 54 குற்றவாளிகளில் ஏற்கெனவே மூவர் மரணத்துக்கும் மூவர் தீவாந்தர சிட்சைக்கும் உட்பட்டார்கள். 4 பேர் மன்னிப்புப் பெற்ருர்கள். மூவர் விடுதலை யடைந்தார்கள். ஒருவன் மரித்துப் போனுன். 5 பேர் ஆயுத சட்டத்தின்படி விசாரிக்கப் பட்டு வருகிருர்கள். மற்ற 35 பேர் இராஜாங்கத்துக்கு விரோதமான குற்றத்தில் ஸ்பெஷல் கோர்ட்டில் விசாரிக்கப்படத் தீர்ப்புப் பெற்றிருக்கிருர்கள்.

Pondicherry News :—சில தினங்களுக்கு முன் புதுச் சேரியில் பெரும்பாலும் 21 வயதுக் குட்பட்ட 17 புருஷர் கத்தி முதலிய ஆயுதங்களைப் புதுச்சேரிக்குக் கொண்டுவந்ததாய் ஜக்கோர்ட்டில் விசாரிக்கப் பட்டு தனித்தனி ஆறுமாதம் கடின காவல் சிட்சையும் 50 பிராங் அபராதமும் விதிக்கப் பெற்ருர்கள். எப்பிரல் மீ 24வ நடந்த எலக்‌ஷனுக்கு இரண்டு நாள் முந்தி இவர்கள் மேற்படி ஆயுதங்களைக் கட்டை வண்டிகளில் போட்டு மேலே வைக்கோலை பரப்பிப் பட்டணத்துக்குக் கொண்டு வந்தார்களாம். போலீஸ் கமிஷனர் வீட்டுக்கு எதிரே வருகையில் பாழும் வண்டி இந்த மோசக் காரரைக் காட்டிக் கொடுப்பது போல ஒரு வண்டி சக்கரங் கழன்று கீழே விழுந்துவிட மறைத்து வைக்கப் பட்டிருந்த ஆயுதங்கள் கீழே கொட்டி ஆசாமிகளுடைய சூதை வெளியாக்கி விட்டதாம். உடனே அத்தனைப் பேரும் பிடிப்பட்டு விட்டதாய்த் தெரிய வருகிறது.

Transit of Halley's Comet :—மேமீ 19வ ஹாலியின் வால் நட்சத்திரம் பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் சூரியனை கடந்து போனபோது கோடைக்காணல் நட்சத்திரப் பங்களா அதிபர் அதைப் படம் பிடித்திருக்கிருர். கடத்தல் காலை 8 மணிக்கு ஆரம்பித்து, முழுவதும் கடந்து செல்ல ஒரு மணிநேரம் சென்றதாம். அப்போது மந்தாரமாயிருந்தாலும் தோற்றம் நன்ருய் இருக்கிறதென்று சொல்லப் படுகிறது. ஆயினும் விசேஷம் ஒன்றும் காணப்படவில்லை என்று அறிகிருேம்.

Dynamite Explosion at Ravana :—மேமீ 19வ அவாணுவிலிருந்து ரூட்டர் தெரிவிக்கிறதாவது ஜாதி கலகமுண்டாகு மென்றஞ்சி பப்ளிக் வொர்க்ஸுக்குச் சொந்தமான 3000 பவுண்டை னமெட் வெடி மருந்தை பாரெக்ஸிலிருந்து வெளிப் படுத்துகையில் ஒருவன் ஒரு பையைக்கைத் தவறிக் கீழே போட்டு விட்டான். அது வெடித்து நூற்றுக் கணக்கான பேர் மாண்டும் காயப்பட்டும் போனுர்கள். சிலர் ஒரு மைல் தூரம் தூக்கி எறியப் பட்டார்கள். பாரெக்ஸ் கட்டடம் அழிக்கப் பட்டுப் போனது. இதனுல் பலர் மாண்டார்கள்.

நசரையார் சதகம் :—ஆண்டவருடைய அருண் மொழிகளின் மேல் நூறு விருத்தங்களடங்கியது. இப்பத்திரிகை தமிழ் எடிட்டரிடங் கிடைக்கும். ஒரு அணு லேபில் அனுப்பிப் பெற்றுக்கொள்க.